**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 131/2023**

**Deposition of P.W.** 10

Name : திரு. மோசஸ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 28.01.2026

A1 to A3 Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று காஞ்சிரங்கோட்டில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் 31.10.2019ம் தேதி 18.00 மணிக்கு நான் பணியில் இருந்த போது வட்டார வளர்ச்சி அலுவலகர் திருமதி ஜிஜிலெட் செலினா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 352/2019 பிரிவுகள் 427, 379 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரில் சம்பவ நேரம் மற்றும் சம்பவ நாள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பொய்யான புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும். வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.